


# தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்



## THE WORD OF CHRIST

கிறிஸ்துவின் வசனம் உங்களுக்குள்ளே சகல
ஞானத்தோடும் பரிபூரணமாக வாசமாயிருப்பதாக
கொலோசெயர் 3:16


மரம் 3 ஜூன் 2003 கனி 7

ஆசிரியர்
B. அர்ஜுனன்

கர்த்தருக்குப் பயப்படுகிற பெரியோரையும்
சிறியோரையும் ஆசீர்வதிப்பார். சங். 115:13

கிறிஸ்துவின் வசனம்

அற்புதமான வசனம்



தூத்துக்குடி மாவட்டத்தில் நடைபெற்ற பத்தாவது வாசகர் கருத்தரங்கில் கலந்து கொண்டவர்கள்.

## வேத அறிவுப்போட்டி எண் 33ல் வெற்றிபெற்றவர்கள்

1. S. எஸ்தர் மெர்சி - வத்தலக்குண்டு
2. P. அலிஸ்மேரியம்மாள் - வத்தலக்குண்டு
3. Mrs. கிரேஸ்லூயிஸ் - நிலக்கோட்டை
4. V. கோவலன் - மதுரை
5. IRA. எதிராசன் - சங்ககிரி
6. S. ஆனந்தராஜ் - ஈரோடு
7. Dr. ஜெயசிங் - சென்னை
8. T. ஜான்பாலன் - நாசரேத்
9. M. சௌதன்யா - பண்ணைப்புரம்
10. G. மெர்சிரூபி - கொடுவாய்
11. A. ரெபேக்காள் - வடிவேல்கரை
12. J. நிர்மலாஜான் - மதுரை
13. P.S. லலிதாபிரேமகுமாரி - மதுரை
14. L. மனாசேமன்னு - சித்தூர் (A.P)
15. G.P. ஏசையன்ராஜ் - கோபி
16. S. தண்டபாணி - சிலுவத்தூர்
17. Mrs. வசந்தாசாமுவேல் - காமலாபுரம்
18. Mrs. குளோரிபவுல்சர் - சென்னை
19. V. சௌதாமினி - சங்ககிரி
20. K. சாந்தி - M. வாடிபட்டி
21. நி. ஜூலியட்- ஆனையூர்
22. S. ராஜபிரசாத் -ஆனையூர்
23. K. ப்ரஜிதா - ஈரோடு
24. P.M. சத்தியவாசகன் - சேலம்
25. Mrs. ஜெயந்திநோயல் - சேலம்
26. S. செல்லமணிஆறுமுகம் -Y. ஒத்தக்கடை
27. S.R. பெரியசாமி - சேளூர்
28. A. ஜோதிகாந்தம் - பாண்டியநல்லூர்
29. N. கஸ்தூரி கிறிஸ்டி - திருவண்ணாமலை
30. Mrs. வைலட் சுந்தர்சிங் - T. வாடிப்பட்டி
31. N. சாலமோன் - காங்கயம்
32. V. சரவணக்குமார் - கோவை

FOR FREE DISTRIBUTION

"Go ye into all the world, and preach the gospel to every creature" Mark 16:15


Published by
WORLD LITERATURE PUBLICATIONS
Post Box No. 5, Batlagundu - 624 202.
SOUTH INDIA.

தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்
THE WORD OF CHRIST
புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்

மரம் 3 ஜூன் 2003 கனி 7

ஆசிரியர் உரை

# இரட்சிக்கும் தேவன்
# SAVING GOD




உலகத்திலே அநேக தேவர்களும், தேவிகளும் இருந்தாலும், நம்மை இரட்சிக்கிறவர் தேவனே. அநேக இரட்சகர்கள் தோன்றி மரித்து விட்டார்கள். ஆனால் உலக இரட்சகர் இயேசுவோ "மரித்தேன், ஆனாலும், இதோ, சதா காலங்களிலும் உயிரோடிருக்கிறேன்" (வெளி. 1 : 18) என்று திருவுளம் பற்றுகிறார். நாம் காண்கின்ற வானமும், பூமியும் அதிலுள்ள யாவும் இவர் மூலமாய் உண்டாயிற்று. இப்புவியில் ஒருவன் இரட்சிக்கப்பட இயேசுவையும் அவருடைய உபதே சத்தையும் ஏற்றுக் கொள்ள வேண்டும். இரட்சிப்பு என்றால் காக்கப்படுதல். மனிதன் பூமியில் எதை எதையோ காக்கிறான் முடிவில் தன்னைக் காக்க மறந்து போகிறான். இங்கு நாம் காண்கின்ற யாவும் ஒரு நாள் அழிந்து போகும் ஆனால் மனிதனுடைய ஆத்துமா ஒருக்காலும் அழியாதது அதை நித்திய நித்தியமாக காக்க (இரட்சிக்க) ஒரே வழி இயேசுவே.

தாவீது அரசன் கூறுவதைப் படியுங்கள். "எந்நாளும் ஆண்டவருக்கு ஸ்தோத்திரமுண்டாவதாக; நம்மேல் பாரஞ்சுமத்தினாலும் நம்மை இரட்சிக்கிற தேவன் அவரே" (சங். 68 : 19). அன்று முதல் இன்று வரை மனிதன் குறுக்கு வழியையே தேடுகிறான். கடினமான காரியங்களை செய்யவும், ஏற்றுக் கொள்ளவும் மறுக்கிறான். இயேசுவை பின்தொடர்ந்த சீடர்களும், இயேசுவின் உபதேசத்தைக் கேட்டு ஆச்சரியப்பட்டு "இது கடினமான உபதேசம், யார் இதைக் கேட்பார்கள்" என்றார்கள் (யோவா. 6 : 60). ஆனால் இயேசு கிறிஸ்து உயிர்த்தெழுந்து பரமேறி

சென்றவுடன் இது கடினமான உபதேசம் என்று சொன்ன அதே அப்போஸ்தலர்களே தேவனுடைய ராஜ்யத்தைக் குறித்து பிரசங்கித்து அநேகரை இரட்சிப்புக்கு நேரே வழி நடத்தினார்கள். தாவீது சொல்வது போல் ஆண்டவர் நம்மேல் பாரஞ்சுமத்தினாலும் நம்மை இரட்சிக்கிறவர். ஆகையால் தான் ஆண்டவர் இயேசு "என் நுகத்தை உங்கள் மேல் ஏற்றுக் கொண்டு, என்னிடத்தில் கற்றுக் கொள்ளுங்கள்; அப்பொழுது, உங்கள் ஆத்துமாக்களுக்கு இளைப்பாறுதல் கிடைக்கும். என் நுகம் மெதுவாயும், என் சுமை இலகுவாயும் இருக்கிறது என்றார்" (மத். 11 : 29, 30). ஆண்டவர் கொடுக்கின்ற உபதேசத்தை நம்மேல் ஏற்றுக் கொண்டு, அவரிடத்தில் கற்றுக் கொள்ளும் போது மெய்யான சந்தோஷத்தையும், சமாதானத்தையும் பெற்றுக் கொள்வோம். அப்பொழுது நம்முடைய ஆத்துமா இரட்சிக்கப்படும்.

அந்நாட்களில் பிரதான ஆசாரியரும், வேதபாரகரும், மூப்பரும், இயேசுவை பரியாசம் பண்ணி "மற்றவர்களை இரட்சித்தான்; தன்னைத் தான் இரட்சித்துக் கொள்ள திராணியில்லை; இவன் இஸ்ரவேலின் ராஜாவானால் இப்பொழுது சிலுவையிலிருந்து இறங்கி வரட்டும், அப்பொழுது இவனை விசுவாசிப்போம்" என்றனர் (மத்.27 : 42). இதைப் பார்த்த பரலோகத்தின் தேவன் "அவருடைய மரண உபாதிகளின் கட்டை அவிழ்த்து, அவரை எழுப்பினார்" (அப். 2 : 24). அவரை பரியாசம் பண்ணினவர்கள் தலை கவிழ்ந்து வெட்கப்பட்டனர். "ஒன்றுக்கும் உதவாத தெய்வத்தை உருவாக்கி, விக்கிரகத்தை வார்ப்பிக்கிறவன் எப்படிப்பட்டவன்? இதோ, அவனுடைய கூட்டாளிகளெல்லாரும் வெட்கமடைவார்கள்; தொழிலாளிகள் நரஜீவன்கள் தானே; அவர்கள் எல்லோரும் கூடிவந்து நிற்கட்டும்; அவர்கள் ஏகமாய்த் திகைத்து வெட்கப்படுவார்கள்" (ஏசா.44:10, 11). சிலுவையில் அறையப்பட்ட இயேசு உயிர்த்தெழாமலிருப்பதற்கு அவர் ஒரு விக்கிரகமல்ல. அவர் என்றும் ஜீவிக்கிறவர் ஆகையால் அவர் உயிர்த்தெழுந்து நாற்பது நாள் அநேகருக்கு காட்சியளித்தார்.

இப்படிப்பட்ட உன்னதமானஆண்டவரை விட்டு மனிதன் "தனக்கு கேதுருக்களை வெட்டுகிறான்; ஒரு மருதமரத்தையாவது ஒரு கர்வாலி மரத்தையாவது, தெரிந்து கொண்டு, காட்டு மரங்களிலே பெலத்த மரத்தைத் தன் காரியத்துக்காக வளர்க்கிறான்; அல்லது அசோக மரத்தை நடுகிறான், மழை அதை வளரச் செய்யும். மனுஷனுக்கு அவைகள் அடுப்புக்காகும் போது, அவன் அவைகளில் எடுத்துக் குளிர்காய்கிறான்; நெருப்பை மூட்டி அப்பமும் சுடுகிறான்; அதினால் ஒரு தெய்வத்தையும் உண்டு பண்ணி, அதைப் பணிந்து கொள்ளுகிறான்; ஒரு விக்கிரகத்தையும் அதினால் செய்து, அதை வணங்குகிறான். அதில் ஒரு துண்டை அடுப்பில் எரிக்கிறான்; ஒரு துண்டினால் இறைச்சியைச் சமைத்துப் புசித்து,

பெரியலைப் பொரித்து திருப்தியாகி, குளிருங்காய்ந்து; ஆ ஆ அனலானேன்; நெருப்பைக் கண்டேன் என்று சொல்லி; அதில் மீதியான துண்டைத் தனக்கு விக்கிரக தெய்வமாகச் செய்து, அதற்கு முன் விழுந்து, அதை வணங்கி: நீ என் தெய்வம், என்னை இரட்சிக்க வேண்டும் என்று அதை நோக்கி மன்றாடுகிறான்" (ஏசா.44 : 14-17). தங்கள் விக்கிரகமாகிய மரத்தைச் சுமந்து, இரட்சிக்க மாட்டாத தேவனைத் தொழுது கொள்ளுகிறவர்கள் அறிவில்லாதவர்கள். (ஏசா.45 : 20) நடக்கமாட்டாத, பார்க்க மாட்டாத, மூக்கிருந்தும் முகரமாட்டாத, கைகள் இருந்தும் இரட்சிக்க மாட்டாத விக்கிரகங்களை நோக்கி நீ என் தெய்வம் என்னை இரட்சிக்க வேண்டும் என்று சொன்னால் அது அவனை இரட்சிக்குமா? "அவராலேயன்றி வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை; நாம் இரட்சிக்கப்படும்படிக்கு வானத்தின் கீழெங்கும், மனுஷர்களுக்குள்ளே அவருடைய (இயேசுவுடைய) நாமமேயல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவும் இல்லை." (அப். 4: 12)

தாவீது அரசன் கூறும் மற்றுமொரு வாக்கியம் : "நம்முடைய தேவன் இரட்சிப்பை அருளும் தேவனாயிருக்கிறார்; ஆண்டவராகிய கர்த்தரால் மரணத்திற்கு நீங்கும் வழிகளுண்டு" (சங்.68 : 20). இரட்சிப்பை அருளும் தேவனிடம் மரணத்திற்கு நீங்கும் வழிகளுமுண்டு என்று குறிப்பிடுகிறார். ஆம் அது இயேசுவிடம் உண்டு "ஒருவன் என் வார்த்தையைக் கைக் கொண்டால், அவன் என்றென்றைக்கும் மரணத்தைக் காண்பதில்லை என்று மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்" (யோவா.8:51). அவருடைய வார்த்தையைக் கைக் கொள்ளும் போது நாம் மரணத்திலிருந்து விடுவிக்கப்படுகிறோம். அவர் "மரணத்திற்கும் பாதாளத்திற்குமுரிய திறவுகோல்களை உடையவராயிருக்கிறார்" (வெளி.1: 18) அந்த அதிகாரமுடையவராயிருந்தபடியினாலே மரித்து நான்கு நாட்களான லாசருவின் கல்லறையைப் பார்த்து "லாசருவே, வெளியே வா என்று, உரத்த சத்தமாய்க் கூப்பிட்டார்" (யோவா. 11 : 43). மரித்து அடக்கம் செய்யப்பட்ட லாசரு இயேசுவின் சத்தத்தைக் கேட்டு வெளிவந்தான். மரித்துப் போன லாசருவை எழுப்பின கர்த்தர் இன்று உயிரோடு இருக்கிற நம்மையும் நம் குடும்பத்தாரையும் இரட்சிக்க வல்லவராயிருக்கிறார். நீங்கள் விசுவாசித்தால் தேவனுடைய மகிமையைக் காண்பீர்கள்.

ஏசாயா தீர்க்கன் மூலம் கர்த்தர் உரைக்கும் போது : "என் இரட்சிப்பு தாமதிப்பதுமில்லை" (ஏசா. 46 : 13) என்கிறார். சதாகாலமும் ஜீவிக்கிற அவரை நோக்கி நாம் கூப்பிடும் போது அவர் உடனே நம்மை இரட்சிக்கிறார். "பூமியின் எல்லையெங்குமுள்ளவர்களே, என்னை நோக்கிப் பாருங்கள்; அப்பொழுது இரட்சிக்கப்படுவீர்கள்; நானே தேவன், வேறொருவரும் இல்லை" (ஏசா. 45:22). ஆம் பிரியமான சகோதரனே,

சகோதரியே வானத்திற்கும், பூமிக்கும் தேவனாகிய கர்த்தரை அல்லாது வேறொரு நாமம் இல்லை. நாம் இரட்சிக்கப்பட அவரையே நோக்கிப் பார்க்க வேண்டும். தன்னைத் தான் இரட்சிக்கமாட்டாதவைகளையும், மனுஷ கைவேலையுமாக இருக்கிறவைகளையும் நாம் நோக்கிப் பார்த்து இரட்சிப்பைப் பெற முடியாது.

"எல்லோருக்கும் ஜீவனையும் சுவாசத்தையும் சகலத்தையும் கொடுக்கிற அவர், தமக்கு யாதொன்று தேவையானது போல, மனுஷர் கைகளால் பணிவிடை கொள்ளுகிறதுமில்லை" (அப்.17: 25). நம்மை உண்டாக்கின தேவன் நம்முடைய கைகளில், பணிவிடையை எதிர்பாராமல் நம்மையே எதிர்பார்க்கிறார். இதை அறியாது அநேகர் தேவனுக்கென்று விசேஷ படையல், நேர்த்திக் கடன் என்று சொல்லி தங்களுடைய உடமைகளைக் கொடுத்து சரிக்கட்ட நினைக்கின்றனர். சகல மனிதரையும் ஒரே இரத்தத்தினால் தோன்றப் பண்ணின அவர் இவ்விதமான பலிகளையும், படையல்களையும் ஏற்றுக் கொள்ளார். "அறியாமையுள்ள காலங்களை தேவன் காணாதவர் போலிருந்தார்; இப்பொழுதோ மனந்திரும்ப வேண்டுமென்று எங்குமுள்ள மனுஷரெல்லாருக்கும் கட்டளையிடுகிறார்." (அப்.17 : 30). அன்றியும் மனந்திரும்புதலும் பாவமன்னிப்பும் எருசலேம் தொடங்கிச் சகல தேசத்தாருக்கும் அவருடைய நாமத்தினாலே பிரசங்கிக்கப்பட்டு வருகிறது. நீங்களும் இன்றே உங்கள் பாவங்களுக்காக மனந்திரும்பி அவரை ஏற்று அறிக்கையிட்டு ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளுங்கள். அப்பொழுது இரட்சிக்கப்படுவீர்கள் (மாற். 16 : 16). இரட்சிக்கும் தேவன் தாமே உங்களை இரட்சிப்பாராக!

## தெரிந்து கொள்ளுங்கள்

### யோர்தான் நதி

-K.R.K. ரவி ஆசீர்

எர்மோன் மலையடிவாரத்தில் உற்பத்தியாகி கலிலேயாக் கடல் சென்று அங்கிருந்து தெற்கு திசையில் பாய்ந்து சவக்கடலில் சேருகிறது. இந்நதியின் நீளம் 320 கி.மீ. கடல் மட்டத்திலிருந்து கீழே 1300 அடி தாழ்வாக இது ஓடுகிறது. 100 முதல் 200 அடி அகலம் உள்ள சிறிய நதி தான். ஆனாலும் இது வேதாகமத்தில் அதிகமாக பேசப்படும் நதி. இந்த நதியில் தான் இயேசு ஞானஸ்நானம் பெற்றார். இஸ்ரவேல் நாட்டின் கீழ் எல்லையாக இது அமைந்துள்ளது. இந்நதிக்கு கிழக்கே ஜோர்டான் நாடு உள்ளது.



# தேவன் மனுஷரிடத்தில் பட்சபாதமுள்ளவரல்ல

# God is no respecter of Persons

- J.C. Choate



மனுஷன் மனுஷரிடத்திலே பட்சபாத முள்ள சுபாவத்தைக் கொண்டவனாயிருக்கிறான். இது பல வழிகளில் ஏற்பட்டிருக்கின்றன. நிறம், மொழி, பொருளாதாரம், கல்வி, பதவி, தேசம், சமயம் மற்றும் வேறு பல காரியங்களின் அடிப்படையில் பாகுபாடுகள் உருவாக்கப்பட்டுள்ளன.

உலகத்தில் இனம் சம்பந்தப்பட்ட பாகுபாடு என்பது வலிமை மிகுந்த உணர்வாகக் காணப்படுகிறது. மற்றவர்களைக் காட்டிலும் தங்களை மேன்மையாக நினைக்கிறவர்கள் மத்தியிலே இந்த உணர்வு காணப்படுகிறது. சென்று போன வருடங்களில் அடிமைத்தனம் பொதுவாயிருந்த போது, அடிமைகள் ஆத்துமாவை பெற்றிருக்க வில்லை எனவும், அவர்கள் விலங்குகளைப் போலவும், அவைகளைப் போல வேலை செய்ய நடத்தப்பட வேண்டியவர்கள் எனவும் தங்களால் முடிந்தவரை போதிக்கும் படிக்கு சிலர் சென்றனர். இது நம்புவதற்கு அரிதாயிருக்கிறது, ஆனால் உலகத்தின் சில பகுதிகளில் இன்றும் அடிமைத்தனம் ஒரு அமைப்பின் வடிவில் அல்லது ஏதோ வேறொரு வகையில் வளர்ந்து வருகின்றது. நிச்சயமாக இவையெல்லாம் தேவனுடைய போதனைக்கு முற்றிலும் மாறுபட்டதாயிருக்கிறது.

சட்டங்களைக் கொண்டு வருவதின் மூலம் இனப் பாகுபாடு சமுதாயத்திலிருந்து நீக்கப்பட முடியும் என நினைப்பவர் இருக்கின்றனர். இதன் மூலம் இப் பாகுபாடு எளிதாக நீக்கப்படுமானால் ஆச்சரியமாயிருக்கும். ஆனால் இவ்வழியில் இது சாத்தியப்படாது. மேலும் இந்த இனப் பாகுபாடு மற்ற ஒழுக்கமற்ற செயல், பாவம் நிறைந்த செய்கைகளையும், மனநிலைகளையும் போன்ற பாவங்களை போல இதுவும் ஒரு வகையாக இருக்கின்றது. இது உலகம் முடியும் வரை நிலைத்து நிற்கக் கூடிய ஒன்றாயிருக்கிறது. இது மனுஷருடைய பலவீனங்களில் ஒன்றாகும்.

•

கண்டிப்பாக, கிறிஸ்தவர்களாகிய நாம் நம்முடைய முழு பலத்தோடே இனப் பாகுபாட்டினை எதிர்க்க வேண்டும். தேவனுடைய வார்த்தையின் ஆளுகைக்குள்

இல்லாத மற்றவர்கள் இவ்விதமான வெறுப்புடையவர்களாகவும், இனப் பாகு பாடுடையவர்களாகவும் இருக்கின்றனர். ஆனால் இப்படிப்பட்ட மனநிலையிலுள்ள கிறிஸ்தவர்களுக்கு மன்னிப்பில்லை. நம்முடைய இனம் அல்லது தேசம் குறித்து இழிவாக நமக்கெதிராகவே மற்றவர்கள் பேசுவார்களானால் நாம் எவ்வாறு மனவேதனை யடைவோம்? என நம்மை நாமே கேட்டுக் கொள்ள வேண்டும்.

வேதாகமம், தேவன் மனுஷரிடத்தில் பட்சபாதமுள்ளவரல்ல என போதிக்கிறது. பவுல், "தேவனிடத்தில் பட்சாதமில்லை" (ரோமர் 2 : 11) எனக் கூறுகிறார். தேவன் மனுஷனையும், மனுஷியையும் சிருஷ்டித்து, அவர்கள் மூலமாக அவர் சகல ஜனங்களுடைய சிருஷ்டிகராயிருக்கிறார். அவர் ஒவ்வொருவருக்கும் ஒரு ஆத்துமாவைக் கொடுத்தார் மேலும் எல்லாருக்காகவும் மரிக்கும்படி தன்னுடைய குமாரனைக் கொடுத்தார், இப்படியிருக்க, தேவன் ஒருவனைக் காட்டிலும் இன்னொருவனை உயர்வாக எண்ணுகிறார் என ஏன் ஒருவன் நினைக்க முற்படுகிறான்? கிறிஸ்து, "தேவன், தம்முடைய ஒருபேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப் போகாமல் நித்திய ஜீவனை அடையும் படிக்கு, அவரைத் தந்தருளி இவ்வளவாய் உலகத்தில் அன்பு கூர்ந்தார். உலகத்தை ஆக்கினைக் குள்ளாகத் தீர்க்கும்படி தேவன் தம்முடைய குமாரனை உலகத்தில் அனுப்பாமல், அவராலே உலகம் இரட்சிக்கப் படுவதற்காகவே அவரை அனுப்பினார்" (யோவா. 3 : 16, 17) என்றார்.

கர்த்தர் தம்மை விசுவாசித்து ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளும் அனைவரையும் இரட்சிக்கும்படிக்கு வாக்குப் பண்ணியிருக்கிறார் (மாற்.16 : 16) அவர் மற்றவர்களை வெறுக்கும் போது ஒருவனை நேசிக்கிறதில்லை. அவர், மற்றவர்களை செய்யும்படி தாம் கேட்டுக் கொண்டபடி அவர்கள் செய்திருந்தாலும் கூட அவர்களை இரட்சிக்க மறுக்கும் போது ஒருவனுடைய ஆத்துமாவை இரட்சிக்கும்படி வாக்குப் பண்ணவில்லை.

ஒருவன் விசுவாசமிகுந்த ஒரு கிறிஸ்தவனாயிருக்கையில், தேவன் அவனுக்குச் செவி கொடுத்து அவனோடே கூட இருக்கும்படிக்கு வாக்கு பண்ணியிருக்கிறார். நியாயத் தீர்ப்பின் நாளிலே அவர் எல்லாரையும் ஒரே விதமாக அவருடைய சித்தத்தை அவர்கள் செய்துள்ளனரா இல்லையா என்ற அடிப்படையிலே நியாயந்தீர்ப்பார். அவர் ஒருவனை அவனுடைய தோலின் நிறத்தை வைத்தோ, மற்றும் அவனுடைய நிதி நிலையை வைத்தோ மேலும், அவனுடைய மொழியை வைத்தோ, மற்றும் வேறு ஏதாவது வேறுபாடுகளை வைத்தோ இரட்சிக்க மாட்டார். அவர் அவனுடைய நிறத்தின் அடிப்படையில், அவன் ஏழையாயிருப்பதினால், அல்லது பிரஜா உரிமை உடையவனாயிருப்பதினால் ஒருவனை தண்டிக்கவோ மாட்டார். அவர் தமக்குக் கீழ்ப்படிந்து தம்மிடத்தில்

விசுவாசமிக்கவனாயிருக்கிறவனை இரட்சிப்பார். மற்றபடி அவர் தமக்குக் கீழ்ப்படிய மறுக்கிறவனை அல்லது தமக்குக் கீழ்ப்படிந்து ஆனால் தம்மிடத்தில் விசுவாசமற்றவனாயிருக்கிறவனை புறக்கணிப்பார். (மத்.25:31-46).

பேதுரு புறஜாதியானாகிய கொர்நேலியுக்கும் அவனுடைய குடும்பத்தாருக்கும் சுவிசேஷத்தை போதிக்கின்ற சமயத்தில், வேதம் "அப்பொழுது பேதுரு பேசத் தொடங்கி : தேவன் பட்சபாதமுள்ளவரல்ல என்றும், எந்த ஜனத்திலாயினும் அவருக்குப் பயந்திருந்து நீதியைச் செய்கிறவன் எவனோ அவனே அவருக்கு உகந்தவன் என்றும் நிச்சயமாய் அறிந்திருக்கிறேன்" (அப்.10:34, 35) எனக் கூறுகிறது. கொலோசெய சபைக்கு பவுல் கூறுகையில், "அநியாயஞ் செய்கிறவன் தான் செய்த அநியாயத்துக்கேற்ற பலனை அடைவான், பட்ச பாதமே இல்லை" (கொலோ. 3 : 25) எனக் கூறினான்.

யாக்கோபு, "பட்சபாதமுள்ளவர்களாயிருப்பீர்களானால், பாவஞ் செய்து, மீறினவர்களென்று நியாயப் பிரமாணத்தால் தீர்க்கப்படுவீர்கள்" (யாக்.2 : 9) எனக் கூறினான்.

பவுல் நமக்கு, "இப்படியிருக்க நீ உன் சகோதரனைக் குற்றவாளியென்று தீர்க்கிறதென்ன? நீ உன் சகோதரனை அற்பமாய் எண்ணுகிறதென்ன? நாமெல்லாரும் கிறிஸ்துவினுடைய நியாயாசனத்திற்கு முன்பாக நிற்போமே" (ரோம.14:10) என நினைப்பூட்டுகிறான். மறுபடியும் அவன், "ஏனென்றால், சரீரத்தில் அவனவன் செய்த நன்மைக்காவது தீமைக்காவது தக்க பலனை அடையும்படிக்கு நாமெல்லாரும் கிறிஸ்துவின் நியாயாசனத்திற்கு முன்பாக வெளிப்பட வேண்டும்" எனக் கூறினான் (2 கொரி. 5:10)

நீங்கள் மற்றவர்கள் மேல் வெறுப்பற்ற இருதயத்தோடும், கிறிஸ்துவின் இரத்தத்தால் கழுவப்பட்ட சுத்த இருதயத்தோடும் இருந்து கர்த்தரை சந்திக்க ஆயத்தமாயிருக்கிறீர்களா? இப்பொழுதே ஆயத்தமாகக் கூடிய நேரம்.

◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆

### வேத அறிவுப் போட்டி எண் 33 ன் விடைகள்

| | |
|---|---|
| 1. தாவீது யோனத்தானை -1 சாமு.20 : 8 | 6. பாவத்தின் - கலா. 3: 22 |
| 2. சூனேமியாளின் மகன் -2 இரா. 4 : 19 | 7. உங்கள் பொறுமை - லூக். 21: 19 |
| 3. அவசியமாய் உதவி செய்ய வேண்டும் - யாத்.20 :5 | 8. சாந்தமாய் - 2 தீமோ.2:26 |
| 4. செபுலோனும்,நப்தலியும் - நியா.5:18 | 9. ஏற்றவராயிருக்கிறார் - எபி. 7: 26 |
| 5. தேவனுடைய - எபே. 2: 8 | 10. மனுஷன் - பிர.9 : 12 |

பெண்கள் பகுதி

# வஸ்திரத்திலிருந்து வல்லமை



இயேசு கிறிஸ்துவின் வஸ்திரத்தை தொட்டு சுகமான ஒரு ஸ்திரீயைப் பற்றி அறிகிறோம். 12 வருஷ காலமாக பெரும் பாடுள்ள ஸ்திரீ என்று எழுதப்பட்டுள்ளது. இதோ அவள் மெலிந்து, வெறுத்துப் போய் விட்டாள். 12 ஆண்டு காலமாக இவள் இரத்தம் சிந்தகூடிய ஒரு வியாதியால் கஷ்டப்படுகிறாள். இவள் தன்னிடத்தில் இருந்த ஆஸ்தி எல்லாவற்றையும் செலவழித்து விட்டாள். கொஞ்சமும் சுகம் கிடைக்கவில்லை. மாறாக வலியும் வேதனையும் அதிகமாக போய்விட்டது. 4 விஷயங்களை லூக்கா நமக்கு சொல்கிறார். 1. இந்த வியாதியின் காலம் 12 ஆண்டுகள். 2. எல்லா சொத்தும் போய் விட்டது எல்லா வியாதியஸ்தர்களையும் போல இவள் இல்லை ஏனென்றால் 3. எல்லா வைதியரையும் இவள் பார்த்து விட்டாள். 4. கொஞ்சம் கூட சுகம் இல்லை. இந்த புத்தகத்தை எழுதுகிற லூக்கா என்பவர், புதிய ஏற்பாட்டுக் காலத்திலே கிரேக்க மருத்துவத்தை இப்போது இருக்கிற அலோபதி போல அறிந்து பிரபலமாய் இருந்த ஓர் மருத்துவர். லூக்கா ஒரு மருத்துவர் என்பதை அறிவு சார்ந்த அப்போஸ்தலர் பவுல் அவர்கள் நமக்கு கூறுகிறார். கொலோ 4: 14 பிரியமான வைத்தியனான லூக்கா என்று கூறப்படுகிறார். ஆகவே இந்த லூக்கா ஒரு மருத்துவரானபடியினாலே இந்த வியாதியை ஒரு சாதாரண விஷயமாக எழுதாமல் அது உண்மையிலேயே கஷ்டமான ஒரு விஷயம் என்று குறிப்பிடுகிறார். 12 வருஷ காலமாக பாடுபடுகிற இவளுக்கு எவ்வளவு கஷ்டம் இருந்திருக்கும் என்று உங்களுக்கு சொல்ல தேவையில்லை!

மத். 17: 1 ஆறுநாளைக்கு பின்பு இயேசு பேதுருவையும், யாக்கோபையும் அவனுடைய சகோதரனாகிய யோவானையும், கூட்டிக் கொண்டு தனித்திருக்கும்படி உயர்ந்த மலையின் மேல் போய் அவர்களுக்கு முன்பாக மறுரூபமானார். அவர் முகம் சூரியனைப் போல பிரகாசித்தது. அவர் வஸ்திரம் வெளிச்சத்தைப் போல வெண்மையாயிற்று, கவனிக்க வேண்டும், இயேசு போட்டுக் கொண்டு இருந்த வஸ்திரம் வெண்மையாகவும், வெளிச்சமாகவும் இருப்பதாக நாம் இங்கே அறிகின்றோம். மாற்கு 6 : 56 இன்னொரு செய்தியை மாற்கு நமக்கு குறிப்பிடுகிறார். அல்லாமலும், அவர் பிரவேசித்த கிராமங்கள், பட்டணங்கள், நாடுகள், எவைகளோ அவைகளின் சந்தை வெளிகளிலே வியாதிக்காரரை வைத்து அவருடைய வஸ்திரத்தின் ஓரத்தையாகிலும் அவர்கள் தொடும்படி உத்திரவாக வேண்டும் என்று அவரை வேண்டிக் கொண்டார்கள்.

அவரை தொட்ட யாவரும் சொஸ்தமானார்கள் என்ற ஒரு குறிப்பு இருக்கிறது. இந்த இரண்டு வசனங்களையும் சேர்த்துப் படித்தால் இயேசு தேவனுடைய குமாரன் அவருக்கு தேவன் வல்லமை அளித்து இருந்தார். அவருடைய சரீரத்துக்கு மேலே தொங்கிக் கொண்டு இருந்த அந்த உடை வல்லமை வெளிப்படுத்தும் ஒரு பாத்திரமாக செயல்படுகிறது. **இயேசு தாமே அணிந்திருந்த அந்த உடை இவ்வளவு வல்லமையுள்ளதாக இருந்து இருக்குமானால் அவருடைய சரீரம் எவ்வளவு வல்லமையுள்ளதாய் இருந்திருக்க வேண்டும்.** கிறிஸ்துவின் வஸ்திரத்தை தொட வேண்டும் என்ற ஒரு நம்பிக்கை மக்கள் மத்தியிலே அவருடைய காலத்தில் இருந்தது. அந்த நம்பிக்கையை தானும் பெற்று எப்படியாவது இயேசு கிறிஸ்துவின் வஸ்திரத்தை தொட்டுவிட வேண்டும் என்று அந்த கூட்டத்துக்குள்ளே வந்தார்கள். ஆனால் இயேசு கிறிஸ்துவின் வஸ்திரத்தை தொட வந்த இந்த அருமைத்தாய் அதை தொட நெருங்கும் போது இயேசுவுக்கு முன்னால் வராமல் பின்னால் வந்து அவருடைய வஸ்திரத்தின் ஓரத்தை தொட்டாள் என்று லூக். 8: 44ல் காண்கின்றோம். ஏன் அவள் முன்னால் வந்து தொடவில்லை. பல காரணங்கள் அதற்கு இருக்கலாம்.

ஆனால் என்னுடைய யோசனையாக இதை சொல்லுகிறேன் அதாவது அவள் முன்னால் வர, வெட்கமாக இருந்து இருக்கலாம், அல்லது அவளுடைய பாவ பாரம் அவளை அழுத்தி இருக்கலாம், அல்லது முன்னால் வந்தால் அவருடைய அப்போஸ்தலர்கள் தன்னை விரட்டி விடுவார்கள் என்ற பயம் இருந்து இருக்கலாம். இயேசுவுக்கு முன்னால் வருகிற ஒரு விசுவாசியும் உண்டு. இயேசுவுக்கு பின்னாலே வந்த இந்த தாய், மிக தாழ்மையான இருதயத்தை பெற்றிருக்கிறாள்" ஆண்டவரை முன்னாள் சந்திக்க தனக்கு தகுதி இல்லை என்பது போல தன்னுடைய ஆண்டவரை பின்னால் நின்று தொட முயற்சிக்கிறாள்."

இரண்டு வருஷம் வியாதிப்பட்டால் சலித்து கொள்கிறோம். 6 மாத வியாதி வந்த உடனே கர்த்தரிடத்திலே சாக வேண்டும் என்று நொந்து கொள்கிறோம். "வியாதி நம்முடைய வாழ்க்கையிலே வரக்கூடிய ஒரு விருந்தாளி. சொஸ்தம் நமக்கு ஆண்டவர் அருளும் ஈவு ஆசீர்வாதம். "ஒரு வியாதியிலிருந்து ஒரு ஆள் சுகமானால் தான் கர்த்தருடைய அன்பை புரிந்து கொள்ள முடியும். ஒருவன் வியாதியிலே சுகமானால் தான் தேவனுடைய வல்லமையை புரிந்து கொள்ள முடியும். "வியாதிகள் நம்முடைய அக்காள், தங்கை போன்றது." அது குடும்பத்திலே பிறந்த ஒன்று அது ஆதாமின் குடும்பத்திற்கு கீழ்ப்படியாமையினால் வந்தது. மனுஷன் மனுஷசாயலில் இருக்கிற கடவுளையும், பறவை சாயலில் இருக்கிற கடவுளையும், மிருக சாயலில இருக்கிற கடவுளையும், ஊரும்பிராணியின் சாயலில் இருக்கிற கடவுளையும் உற்பத்தி செய்ததினாலே தேவன் அவர்களை இழிவான இச்சை ரோகங்களுக்கும், சகல அக்கிரமங்களை செய்யும் படியாக அவர்களை விட்டு விட்டார்கள் என்று நாம் வாசிக்கிறோம். இழிவான இச்சைரோகங்கள், மனுஷன் தகாத விதமாய் ஒருவரை ஒருவர் அனுபவித்ததினாலே உண்டாயிற்று என்று வேதாகமம் கூறுகிறது.

நமக்கு எவ்வளவு பெரிதான இரட்சிப்பும், சமாதானமும் உண்டாயிருக்கிறது என்று பார்த்தீர்களா! ஒருவேளை இன்றைக்கு நீங்கள் முதல் நூற்றாண்டு காலத்திலே இயேசுகிறிஸ்து சரீரத்தை, அவர் உடுத்தி கொண்டிருந்த உடையை தேடிக் கொண்டு போக விரும்புவீர்களா? மத் 27: 35ல் அவரை சிலுவையில் அறைந்தார்கள் பின்பு ... சிலுவையில் அறைவதற்கு முன் வஸ்திரத்தை கழற்றி வைத்து விட்டனர். சிலுவையில்

மரித்த பிறகு அவர்கள் சீட்டு போட்டு அவருடைய வஸ்திரத்தை பங்கிட்டு கொண்டார்கள். என் வஸ்திரங்களை தங்களுக்குள்ளே பங்கிட்டு என் உடையின் பேரில் சீட்டு போட்டார்கள் என்று தீர்க்கதரிசியால் உரைக்கப்பட்டது நிறைவேறும்படி இப்படி நடந்தது.

நாம் இன்று அந்த வஸ்திரத்தண்டை போக வேண்டிய அவசியமே இல்லை. இயேசு கிறிஸ்து மரித்தார் அவர் சிந்திய இரத்தத்திலே விசுவாசம் வைத்தால் நீங்கள் குணமாக்கப்படுவீர்கள். நீங்கள் அந்த இரத்தத்திலே நம்பிக்கை வைத்தால் உங்கள் வியாதிகள் இன்றைக்கும் சொஸ்தமாக்கப்படும். நீங்கள் அந்த இரத்தத்திலே நம்பிக்கை வைத்தால் உங்களுக்கு தேவ சமாதானம் கிடைக்கும். (கொலோ 2 : 13, 14ல் காணலாம்) உங்கள் பாவங்களினாலேயும் உங்கள் மாம்ச விருத்த சேதனமில்லாமையினாலும் மரித்தவர்களாய் இருந்த உங்களையும் அவரோடு கூட உயிர்ப்பித்து அக்கிரமங்களைல்லாவற்றையும் உங்களுக்கு மன்னித்து நமக்கு எதிரிடையாகவும் கட்டளைகளால் நமக்கு விரோதமாகவும் இருந்த கையெழுத்தை குலைத்து, அதை நடுவில் இராதபடிக்கு எடுத்து சிலுவையின் மேலே ஆணி அடித்து விட்டார். இன்றைக்கு நாம் கர்த்தரிடத்தில் திரும்பும் போது நாம் அவருடைய இரத்தத்திலே விசுவாசம் வைக்கும் போது இந்த விடுதலையும் இந்த சுகமும், இந்த இரட்சிப்பும் நமக்கு கிடைக்கிறது. 2 கொரி 5 : 21 நாம் அவருக்குள் தேவனுடைய நீதியாகும்படிக்கு பாவமறியாத அவரை நமக்காக பாவமாக்கினார்.

இரத்தம் சிந்துதல் இல்லாமல் பாவ மன்னிப்பு உண்டாகாது. பாவ மன்னிப்பு உண்டாகும்படி நம்முடைய பாவங்களுக்காக அவர் பாவமானார். நமக்கு நீதியுண்டாகும்படி அவர் அநீதியானார். 2 கொரி 5 : 17 இப்படி இருக்க ஒருவன் கிறிஸ்துவுக்குள் இருந்தால் புது சிருஷ்டியாய் இருக்கிறான். பழையவைகள் ஒழிந்து போயின எல்லாம் புதிதாயின. மாற்றம் நம்முடைய வாழ்க்கையில் வந்து விடுகிறது. அதிசயங்கள் நம்முடைய வாழ்க்கையில் வந்து வடுகிறது. எபே 1: 7 அவருடைய கிருபையின் ஐசுவரியத்தின் படியே இவருடைய இரத்தத்தினாலே பாவ மன்னிப்பாகிய மீட்பு இவருக்குள் நமக்கு உண்டாயிருக்கிறது.

ஏசாயா 64 : 6 நாங்கள் அனைவரும் தீட்டானவர்கள் போல் இருக்கிறோம். எங்களுடைய நீதியெல்லாம் அழுக்கான கந்தையைப் போல இருக்கிறது. நாங்கள் அனைவரும் இலைகளைப் போல உதிருகிறோம். எங்கள் அக்கிரமங்கள் காற்றைப் போல் எங்களை அடித்துக் கொண்டு போகிறது. ஆனால் நமக்கோ எவ்வளவு சந்தோஷம், எவ்வளவு ஆச்சரியமான, ஒரு விடுதலை இயேசுவின் இரத்தத்திலே உண்டாயிருக்கிறது!

ஏசாயா 6 : 3 ஒருவரையொருவர் நமக்கு சேனைகளின் கர்த்தர் பரிசுத்தர் பரிசுத்தர் பூமியனைத்தும் அவருடைய மகிமையால் நிறைந்திருக்கிறது என்று கூப்பிட்டு சொன்னார்கள். கூப்பிடுகிறவர்களின் சத்தத்தால் வாசல்களின் நிலைகள் அசைந்து ஆலயம் புகையினால் நிறைந்தது. அப்பொழுது நான், ஐயோ அதமானேன் அசுத்த உதடுகளுள்ள மனிதன் அசுத்த உதடுகளுள்ள ஜனங்களின் நடுவிலே வாசமாய் இருக்கிறவன் சேனைகளின் கர்த்தராகிய இராஜாவை என் கண்கள் கண்டதே என்றான், அப்பொழுது சேராபீன்களில் ஒருவன் பலியிடத்திலிருந்து தன் கையிலே பிடித்த குறட்டால் ஒரு நெருப்பு தழலை எடுத்து என்னிடத்திலே பறந்து வந்து அதனால் என் வாய்ய தொட்டு இதோ இது என் உதடுகளை, தொட்டதினால் உன் அக்கிரமம் நீங்கி உன் பாவம் நிவர்த்தியானது என்றான்.

## கண்களினால் அல்ல
## Not By Sight

நான் பாதையை அறியவில்லை, நேச கர்த்தாவே,
நீர் என்னை அதில் நடத்தி வந்திருப்பீர்;
விளக்கு எரிந்து கொண்டிருக்கவில்லை இரவிலே
ஒருவரும் காட்டவில்லை வழியை.

மாம்சமானவன் அறைகிறான்
வார்த்தைகளுக்காக
தடுமாறும் பாதங்களை வழிநடத்த;
அவன் பயப்படுகிறான் ஆபத்தைக் கண்டு ஆழங்களில்
கவலை, கண்ணீர், தோல்வி.

உள்ளான மனிதன் நடுக்கத்தின்
குரலில்
செவி சாய்த்திருக்க வேண்டிக் கொள்கின்றான்;
அவன் அறிவான் நீர் மனிதனுக்கென்று
உருவாக்கியிருக்கிற உறுதிமொழியை
உம்முடைய வார்த்தையின் வாக்குத்தத்தை.

அவன் முயலுகிறான்–ஓ கர்த்தாவே, அவன் முயலுகிறான்
விசுவாசத்தில் நடக்க எனக்கு உதவுமே
அடியெடுத்து வைக்க நான் கற்றுக் கொள்ள எனக்குச் சொல்லுமே
இருந்த போதிலும் நான் வழியைக் காணவில்லை.

மேலும், கர்த்தாவே, நான் உம்முடைய கூடுதல்
பெலத்தைக் கேட்கிறேன்
உள்ளான மனிதனை ஸ்திரப்படுத்த
உம்முடைய கண்களை நம்ப கற்றுக் கொள்ள எனக்கு உதவுமே

உம்முடைய வழிகாட்டும் கரத்திற்குக் காத்திருக்க
நான் காண்பேன் உம்முடைய வெளிச்சத்தை,
நான் அறிவேன் பாதையை,
ஒவ்வொரு அடியும் தெரியும் போல;
தயவாய் எனக்கு உதவும் கற்றுக் கொள்ள
கீழ்ப்படிதலை, கர்த்தாவே,
தயவாய் வழிநடத்தும் என் தடுமாறும் ஆத்துமாவை.

*- Betty Burton Choate*

தமிழில் J. குளோரி அர்ஜுனன்

பிரியமானவர்களே இயேசு கிறிஸ்து இந்த மாபெரும் தீர்க்க தரிசனத்தின் நிறை வேறுதலாக நம் உதட்டைத் தொடும் நெருப்பைப் போல, சுகமாக்கும் இரத்தத்தை சிந்தியிருக்கிறார். அவருடைய இரத்தத்தினாலே பாவமன்னிப்பு உண்டாகியிருக்கிறது. இயேசு கிறிஸ்து வஸ்திரத்தை தொட விரும்புகிற மக்கள் இன்றைக்கு அதை தொட முடியாது. ஏனென்றால் அவருடைய வஸ்திரம் தொடப்பட்ட காலம் ஒன்று உண்டு. தொடப்பட்ட பிறகு அவருடைய வஸ்திரம் கிழித்து எடுத்து கொள்ளப்பட்ட ஒரு காலம் உண்டு. இன்றைக்கு நீங்கள் அவரை தொடும்படியாக விரும்பினால், எல்லா மனுஷருக்காகவும் இரத்தம் சிந்திய இயேசுவை தொட விரும்பினால், ஞானஸ்நானமே சரியதான இடமாய் இருக்கிறது. ரோ. 6 : 2. பாவத்துக்கு மரித்த நாம் இனி அதிலே எப்படி பிழைப்போம். இயேசு கிறிஸ்துவுக்குள்ளாய் ஞானஸ்நானம் பெற்ற நாம் அனைவரும் அவருடைய மரணத்துக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றதை அறியாமல் இருக்கிறீர்களா? மேலும் பிதாவின் மகிமையினாலே கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டது போல நாமும் புதிதான ஜீவன் உள்ளவர்களாய் நடந்து கொள்ளும்படிக்கு அவருடைய மரணத்துக்குள்ளாகும் ஞானஸ்நானத்தினாலே கிறிஸ்துவுடனே கூட அடக்கம் பண்ணப்பட்டோம். ஆதலால் ஆதலால் அவருடைய மரணத்தின் சாயலிலே இணைக்கப்பட்டவர்களானால் அவருடைய உயிர்த்தெழுதலின் சாயலிலும் இணைக்கப்பட்டு இருப்போம். நாம் இனி பாவத்துக்கு ஊழியம் செய்யாதபடிக்கு பாவ சரீரம் ஒழிந்து போகும் பொருட்டாக நம்முடைய பழைய மனுஷன் அவரோடு கூட சிலுவையில் அறையப்பட்டதென்று அறிந்து இருக்கிறோம். மரித்தவன் பாவத்துக்கு நீங்கி விடுதலையாக்கப்பட்டு இருக்கிறானே!

- Selected

**ஒரு வழி**




# வீட்டுச் சபைகளை ஆரம்பித்தல்
# STARTING HOUSE CHURCHES

**பாடம் 28**

## 2. கூடுமிடம் ஒன்றை கண்டறிதல்
## Finding a Meeting Place



உங்களுடைய வீட்டில் கூடி வரும் சபை வளர்ந்து மிக பெரிதாக மாறி விடும். அப்படி நடைபெறும் போது, அங்கத்தினர்களுடைய இரண்டு அல்லது மேற்பட்ட வீடுகளில் கூடுகையை தொடங்குங்கள். பல இடங்களில் வாடகைக்கென்று பொதுவான கட்டிடங்கள் கிடையாது. ஆனபடியினால், நீங்கள் தொடர்ந்து கூடிவரும்படிக்கு குழுவாக பிரித்து அங்கத்தினர்களின் வீடுகளில் கூடிவர வேண்டியிருக்கும்.

பொதுவான இடமாகிய பள்ளிக்கூடத்தில் அல்லது வாடகைக் கட்டடங்களில் கூடி வருவதற்கான வாய்ப்புகள் இருக்கலாம். இப்படியிருக்கின்ற பட்சத்தில் சகல கிறிஸ்தவர்களும் ஒன்றுகூடி இப்படிப்பட்ட கட்டடங்களுக்கு வாடகை செலுத்தலாம். சில சபைகள் தங்களுக்கென சொந்த கட்டடங்களைக் கட்டியுள்ளனர். ஒரு சில இடங்களில் அரசுக்கு சொந்தமான பள்ளிக்கட்டடம் கூடி வருகின்ற இடமாக இருக்கின்றது. நீங்கள் எங்கு கூடிவருகிறீர்கள் என்பது முக்கியமல்ல என்பதை உங்கள் மனதில் கொள்ளுங்கள். முக்கியமானது என்னவென்றால் ஒருவருக்கொருவர் போதித்து பலப்படும்படிக்கு சிறிய அல்லது பெரிய குழுக்களாக சபை அங்கத்தினர்கள் இணைந்து கூடி வருவதேயாகும். ஒரு பகுதியிலுள்ள அனைத்து சபையாரும் ஞாயிற்றுகிழமையில் ஒரே இடத்தில் ஒரே சமயத்தில் இணைந்து கூடிவர ஏதுவிருக்காது. ஏனென்றால் அங்கே கட்டடங்கள் கிடையாது. அனைத்து அங்கத்தினர்களும் சபையில் கூடுவதால் அல்லது அங்கத்தினர்கள் ஒரே இடத்திற்கு நடந்து வந்து கூடிவருவதற்கு அதிக தூரமாயிருப்பதாலும் இது நடைமுறைப்படுத்த இயலாது. முக்கியமானது என்னவென்றால் ஒருமனப்பட்டவர்களாய் கற்றுக் கொள்ளும்படிக்கு கூடுமான அளவிற்கு அங்கத்தினர்கள் ஏதோ ஒரு இடத்தில் ஒன்று கூடிவருதலே முக்கியமானதாகும்.

# 3. சவட்த்தினை நடத்துதல்

## Conducting the Assembly

நீங்கள் புதிய ஏற்பாட்டு வழிநடத்துதலின்படி தேவனை ஆராதிக்க வேண்டியது அவசியம். சரியானபடி ஞாயிறு ஆராதனையை எவ்வாறு நடத்த வேண்டு மென்பதற்கான சில குறிப்புகள் புதிய ஏற்பாட்டில் உள்ளன. ஆராதனையை நடத்துவதற்கான ஒரு பொதுவான நியமம் 1 கொரிந்தியர் 14:40ல் குறிப்பிடப் பட்டுள்ளது. "சகலமும் நல்லொழுக்கமாயும், கிரமமாயும் செய்யப்படக்கடவது". இதனுடைய பொருள் என்னவென்றால், அங்கத்தினர்கள் தங்கள் சொந்த விருப்பத்தினை நிறைவேற்றும்படிக்கு வெளிப்படையான களிகூருதலுக்கென்று கூடி வரக் கூடாது என்பதாகும். அங்கத்தினர்கள் உணர்ச்சி வயப்பட்டு தேவனுடைய ஆராதனையில் தங்களுடைய கட்டுப்பாட்டை இழக்கவும் அனுமதிக்கப்படவில்லை. கிறிஸ்தவர் ஒன்றுகூடி ஆராதிக்க வரும் போது அவர்கள் தங்களைப் பிரியப்படுத்தவோ அல்லது தங்களுடைய சொந்த கண்டுபிடிப்புகளை ஆராதனையில் கொண்டு வருவதற்கோ கூடி வரக்கூடாது. ஆராதனை தேவனுக்குரியது எனவும் அது தேவனால் அறிவுறுத்தப்பட்டுள்ளது என்பதையும் நாம் கண்டிப்பாக நினைவு கூர வேண்டும், "உண்மையாய்த் தொழுது கொள்ளுகிறவர்கள் பிதாவை ஆவியோடும் உண்மையோடும் தொழுது கொள்ளுங் காலம் வரும், தம்மைத் தொழுது கொள்ளுகிறவர்கள் இப்படிப்பட்டவர்களாயிருக்கும்படி பிதாவானவர் விரும்புகிறார்" (யோவா.4:23). மத உலகமானது தங்களால் கண்டுபிடிக்கப்பட்ட ஒவ்வொரு ஆராதனை முறைமைகளால் நிறைந்து காணப்படுகிறது. எப்படியிருந்த போதிலும், பிதாவானவர் தம்மைத் தொழுது கொள்ளுகிறவர்கள் தம்முடைய வார்த்தையில் தாம் அறிவுறுத்தியிருக்கிறபடியே தொழுது கொள்ளும்படி விரும்புகிறார்.

ஞாயிறு ஆராதனை கிறிஸ்தவர்களுக்கு என்பதை நினைவில் கொள்ளுங்கள். இது பண்டிகையின் நேரம், நம்முடைய பாவங்களுக்காக மரித்த கர்த்தரின் மரணத்தை நினைவு கூரும் நேரம். இப்படியாக இது கர்த்தருடைய பந்தியில் பங்கு கொள்ளும் வாய்ப்பை ஏற்படுத்தும் நேரம் (அப்.20:7) இது ஞானப்பாட்டினால் ஒருவருக்கொருவர் புத்திசொல்லிக் கொள்ளுவதற்கான ஒரு தருணம் (எபே.5:19, கொலோ.3:17). இது தேவனுடைய வார்த்தையைப் பிரசங்கிப்பதற்கும் போதிப்பதற்குமான ஒரு தருணம் (அப்.20:7). இது ஒரு குழுவாக வளர்ச்சியடைவதற்கென சபை தீர்மானித்திருக்கிற விசேஷித்த தேவைகளுக்காக காணிக்கை கொடுப்பதற்கான ஒரு நேரம் (1 கொரி.16:1, 2). இது கிறிஸ்தவர்களாக ஒன்று சேர்ந்து ஜெபக்குழுவில் கூடுவதற்காக நேரமும் கூட (அப்.4:23-31). ஆனபடியினால் ஞாயிறு ஆராதனை ஒரு பெரிய ஐக்கியத்தையும் அனைத்து அங்கத்தினர்களுக்கும் உற்சாகத்தை மூட்டும் ஒரு நேரமாகவும் இருக்க வேண்டும். ஒவ்வொரு கிறிஸ்தவனும் இதில் தவறாமல் ஆஜராக வேண்டும். (எபி.10:24, 25).

தேவனை ஆராதிக்கக் கூடும் சபைக் கூட்டத்தைக் குறித்த காரியத்தில் நினைவுகூர வேண்டிய ஒரு முக்கியக் கருத்து என்னவென்றால் சபையினுடைய பொதுவான கூட்டமும் தேவனைத் துதிக்க வேண்டுமென்பதாகும். ஒருவன் தனக்கு நேரிடும் தருணத்தை பெருமையைக் காண்பிக்கவோ அல்லது தனக்குத் தானே மேன்மையை வருவித்துக் கொள்ளவோ பயன்படுத்தக் கூடாது. ஒருவன் தன்னுடைய சொந்த விருப்பு அல்லது வெறுப்புகளின் அடிப்படையில் ஆராதிக்கக் கூடாது. ஆராதனையானது தொழுது கொள்ளப்பட வேண்டியவரின் விருப்பத்திற்கேற்ப இருக்க வேண்டும். ஆனபடியினால், சபையோடு கூடிய ஆராதனையானது, தேவனை நேராக வழி நடத்தக் கூடியதாகவும் அவருடைய சித்தத்திற்கேற்பவும் ஆராதிக்கப்பட வேண்டும், எந்த ஒரு அங்கத்தினரின் விருப்பத்திற்கேற்ப இருக்கக் கூடாது. கிறிஸ்தவர்களின் ஆராதனையை குறித்தவற்றில் என்ன செய்ய வேண்டுமென்பதற்கான சில அறிவுரைகள் பின்வருவனவாகும்.

**A. சபையைக் கூட்டத்தைத் தொடங்குதல்:** குழு அங்கத்தினரில் ஒருவர் ஒரு பாட்டுடனோ அல்லது ஜெபத்துடனோ கூட்டத்தை ஆரம்பிக்கலாம். இது தேவனைப் பற்றியும் அவருடைய அன்பைக் குறித்தும் நினைவு கூருவதற்கு குழுவிற்கு உதவும். இது சகல அங்கத்தினர்களின் மனதை தேவனுக்கு நேராகவும் அவருடைய கிரியைக்கு நேராகவும் ஒருமுகப்படுத்த உதவி செய்யும். சில சபைகள் ஒரு பாட்டின் மூலம் அல்லது வேதாகமத்திலிருந்து ஒன்றை வாசிப்பதின் மூலம் தொடங்குகின்றன. நீங்கள் உங்கள் வீட்டில் கூடும் குழுவிற்கு என்ன செய்ய வேண்டும் என தீர்மானிக்கலாம். முக்கியமானது என்னவென்றால் ஜனங்களின் கவனத்தை தேவனை துதிப்பதற்கென்றும் ஒருவருக்கொருவர் போதிப்பதற்கென்றும் திருப்ப வேண்டுமென்பதே ஆகும்.

**B. சபைக் கூட்டத்தை தொடர்ச்சியாக கூட்டுதல்:** சபை கூடி வரும் போது தேவனைத் துதிக்கும் படியான பல பாடல்களை பாடுங்கள். நாம் பாட்டின் மூலம் ஒருவருக்கொருவர் போதித்து புத்தி சொல்லுகிறோம் என்பதையும் நினைவு கூருங்கள். (எபே.5:19, கொலோ.3 : 16) சபை அங்கத்தினர்களில் ஒருவர் அல்லது ஒன்றுக்கு மேற்பட்டோர் இப்பாடல்களை நடத்த வேண்டும். நீங்கள் எழுதப்பட்ட பாடல்களையோ அல்லது பாடல் புத்தகத்தையோ கொண்டிராவிட்டால் சொந்தமாக நீங்களே எழுதிக் கொள்ளுங்கள். உங்களுடைய பாடல்களுக்கு இசையைக் கூட்டிக் கொள்ள நீங்கள் வேதாகம குறிப்புகள் அல்லது வேதாகம போதனைகளை பயன்படுத்திக் கொள்ளலாம். பழைய ஏற்பாட்டின் சங்கீதங்கள் யாவும் ஆராதனைக்குரிய பாடல்களாகவே எழுதப்பட்டிருந்தன. நீங்கள் நினைவு கூர வேண்டிய முக்கியமான காரியம் பாடல்கள் வேதாகம உண்மைகளை வெளிப்படுத்துவனவாக இருக்க வேண்டும் என்பதாகும்.

**C. சபைக் கூட்டத்தில் ஜெபம்:** கூட்டம் முழுவதிலும் பல்வேறுபட்ட சமயங்களில் ஜெபம் பண்ணுங்கள். ஜெபிக்கும்படி வெவ்வேறு சகோதரர்கள்

அனுமதிக்கப்பட வேண்டும். ஜெபத்தின் போது முழுச் சபையும் ஜெபத்தினை நடத்துகின்ற நபருடைய வழிநடத்துதலுக்கேற்ப உட்கார்ந்தோ, நின்றோ அல்லது தலைகுனிந்து அமைதியுடன் முழங்கால் படியிட்டோ அவர்கள் நடத்தப்படுகின்றனர். ஜெபத்தின் போது நாம் கைக் கொள்ள வேண்டிய நிலையைக் குறித்து வேதாகமத்தில் எந்த வழிகாட்டுதலுமில்லை.

ஒருவரிப்பாடம் 28 ன் விடைகள்
பகுதி 1: 1.C, 2.B, 3.C

ஜெபமானது பிதாவாகிய தேவனை நோக்கியிருக்கிறது. ஒரு நல்ல ஜெபமானது தேவனைத் துதித்தலோடு ஆரம்பமாகும். அத்தோடு நீங்கள் பெற்றிருக்கிற அனைத்திற்காகவும் ஜெபத்தில் தேவனுக்கு நன்றி செலுத்துவதாகவுமிருக்கும். பாவங்களின் மன்னிப்பிற்காக வேண்டிக் கொள்ளுங்கள். அவருடைய பராமரிப்பிற்காகவும், பொது ஜனங்கள் மத்தியில் செய்யும் ஊழியங்களில் சபையின் வழிநடத்துதலுக்காகவும் ஜெபித்துக் கொள்ளுங்கள். ஜெபம் இயேசுவின் அதிகாரத்திலிருப்பதினாலும், ஜெபத்தின் மூலம் பிதாவாகிய தேவனை நாம் கிட்டிச் சேரும் சிலாக்கியத்தை பெற்றிருக்க இயேசு மத்தியஸ்தராய் கிரியை நடப்பிப்பதாலும் ஜெபத்தினை இயேசுவின் நாமத்தில் முடியுங்கள். (யோவா.14:13, 1 தீமோ.2:5).

**D. சபைக் கூட்டத்தில் கர்த்தருடைய பந்தி :** கூட்டத்தில் ஆஜராயிருக்கும் சகல கிறிஸ்தவர்களுக்கும் கர்த்தருடைய பந்தியை பரிமாறுங்கள். நீங்கள் தட்டில் அல்லது கிண்ணத்தில் ஆயத்தமாக்கியுள்ள அப்பத்தை ஆண் அல்லது பெண் புசிப்பதற்கென்று அதிலிருந்து சிறிதளவு பிட்டுக் கொள்ளும்படி யாரேனும் ஒருவர் ஒவ்வொரு அங்கத்தினருக்கும் அதை கிரமமாகப் பங்கிட்டுக் கொடுக்கும்படி வைக்க வேண்டும். நீங்கள் பங்கிட்டு கொடுத்து அப்பத்தை புசித்த பிறகு திராட்சப்பழ ரசத்தை ஒரு கிண்ணத்தில் அல்லது கிண்ணங்களில் அனைவரும் சிறிதளவு பானம் பண்ணும் படி கிரமமாய் பரிமாறலாம்.

ஒருவர் கர்த்தருடைய பந்திக்கென்று புளிப்பில்லாத அப்பத்தை எளிதாக தயாரிக்கலாம். சாதாரணமாக கொஞ்சம் மாவுடனே எண்ணெய்யை சேர்த்து பயன்படுத்தலாம். சிறிது தண்ணீர் விட்டு பிசைந்து கொள்ளவும். சிலமணித் துளிகளில் வாணலி அல்லது அப்பம் சுடும் பாத்திரத்தில் வைத்து சுட்டுக் கொள்ளவும்.

திராட்சப்பழச் சாறை திராட்சப் பழ ரசத்திற்காக பயன்படுத்தப்படலாம். சில சபைகள் சாறினை பிழிந்தெடுக்கும்படி உலர்ந்த திராட்சையை வேக வைக்கின்றனர். திராட்சப் பழ ரசம் கிடைக்கின்ற பட்சத்தில், சபைகள் அநேக ஜனங்களுக்கு பங்கிட்டு பரிமாறும்படிக்கு அத்துடன் தண்ணீரை சேர்த்துக் கொள்ளுகின்றனர். இது அநேகமாக ஒரு கப் திராட்சப்பழ ரசத்திற்கு நான்கு கப் தண்ணீர் என்ற அளவிலே கலந்து கொள்ளப்படுகிறது.

கர்த்தருடைய பந்தியை பரிமாறுவதற்கு முன் அப்பம், திராட்சப்பழரசம் ஆகிய இரண்டைக் குறித்தான நோக்கத்தை ஒவ்வொருவரும் நினைவுகூரும்படி செய்வது நல்லது. வேத குறிப்புகளுக்காக வாசித்து கற்றுக் கொள்ளக் கூடிய பாடம் 26, E ஐ கர்த்தருடைய பந்திக்கு முன்பாக பார்த்துக் கொள்ளுங்கள்.

**E. சபைக் கூட்டத்தில் பிரசங்கித்தல், போதித்தல், மற்றும் வாசித்தல்:** கிறிஸ்தவர் ஒன்று சேர்ந்து கூடியிருக்கும் போது, தேவனுடைய வார்த்தையின் மூலம் தேவனை தங்களோடு பேச அனுமதிக்கும் ஒரு தருணமாகும். ஆனபடியால், கூடி வந்திருப்போருக்கு வேதம் வாசிப்பது முதன்மையானதாகும். (1 தீமோ.4:13) சபைக் கூட்டத்தினுடைய தருணம் சபைக்கு பிரசங்கிப்பதற்கும் போதிப்பதற்குமான நேரமே ஆகும். இது தேவனுடைய வார்த்தையினால் தேவனை நம்மோடு பேசும்படிக்கு அனுமதிப்பதின் மூலம் தேவனிடத்திற்கு ஒருமுகப்படுத்துவதற்கான ஒரு நேரமாகும். நாம் நம்முடைய சுய உணர்வுகள் அல்லது பாரம்பரியங்களைப் பின்பற்றி போகும்படி தவறாக வழிநடத்தப்பட்டு விடாத படிக்கு நம்முடைய வாழ்க்கை தேவனுடைய வார்த்தையினால் வழிநடத்தப்பட்டிருக்க வேண்டும் என்பதை மனதில் கொள்ளுங்கள்.

உங்கள் கூட்டத்தை நீங்கள் நடத்தும் முறைமையானது கூட்டம் நடக்கின்ற போது, இருக்கிற உங்களுடைய செயல்பாட்டினைப் போலவே முக்கியமானதாக இருக்கவில்லை. குறிப்பாக கர்த்தருடைய பந்தியில் நீங்கள் பங்கெடுக்கும் சமயத்தில் முக்கியமானதாக காணப்படவில்லை. வேதாகமம், "இப்படியிருக்க, எவன் அபாத்திரமாய்க் கர்த்தருடைய அப்பத்தைப் புசித்து, அவருடைய பாத்திரத்தில் பானம் பண்ணுகிறானோ, அவன் கர்த்தருடைய சரீரத்தையும் இரத்தத்தையும் குறித்துக் குற்றமுள்ளவனாயிருப்பான். **எந்த மனுஷனும் தன்னைத் தானே சோதித்தறிந்து, இந்த அப்பத்தில் புசித்து, இந்தப் பாத்திரத்தில் பானம் பண்ணக்கடவன்"** (1 கொரி.11:27-29) எனக் கூறுகிறது.

சபையாக நீங்கள் கூடி வரும் போது, ஒருவரோடொருவர் பேசுவதற்கு நேரத்தை எடுத்துக் கொள்ளுங்கள். ஒவ்வொருவருடைய வாழ்க்கையிலும் நடந்திருக்கிறவற்றை ஒருவருக்கொருவர் தெரிவித்துக் கொள்ள நேரம் எடுத்துக் கொள்ளுங்கள். ஞாயிறு ஆராதனை சபையாருக்கு தொடர்பு வைத்துக் கொள்ளுவதற்கான ஒரு பெரிய சந்தர்ப்பமாகும். இது நற்காரியங்களை செய்ய திட்டமிடுவதற்கான ஒரு சிறந்த நேரமாகும். வேதாகமம், "மேலும், **அன்புக்கும், நற்கிரியைகளுக்கும், நாம் ஏவப்படும்படி** ஒருவரையொருவர் கவனித்து, சபை கூடி வருதலைச் சிலர் விட்டுவிடுகிறது போல நாமும் விட்டு விடாமல், **ஒருவருக்கொருவர் புத்தி சொல்லக்கடவோம்**, நாளானது சமீபித்து வருகிறதை எவ்வளவாய்ப் பார்க்கிறீர்களோ அவ்வளவாய்ப் புத்தி சொல்ல வேண்டும்." (எபி.10:24, 25) எனக் கூறுகிறது. கிறிஸ்தவர்கள், ஒவ்வொருவர் வாழ்விலும் நற்கிரியைகளைச் செய்ய ஏவப்படும்படி கூடி வருகின்றனர். ஆனபடியால், சபைக் கூட்டங்கள், நற்கிரியைகளைச் செய்யும்படிக்கு திட்டமிடுகின்ற, மற்றும் உற்சாகப்படுத்துகின்ற நேரமாக இருக்க வேண்டும்.

**தற்சோதனை:-**

1._____கிறிஸ்தவர்கள் கூடிவரும் போது எது நிறைவேற்றப்பட வேண்டியது அவசியம்?

(A) புத்தி சொல்லுதல் (B) ஆராதனை (C) A & B லுள்ள இரண்டும்.

2._____கூடிவருகிறவர்கள் சபை நடத்துவதற்குரிய பொதுவான கருத்து என்ன?

(A) அனைவரும் ஒரே மாதிரியாக உடை அணிய வேண்டும்
(B) சபைக் கூட்டம் ஒழுங்காகவும், கிரமமாகவும் நடைபெற வேண்டும்.
(C) A & B லுள்ள இரண்டும்.

3._____ஆராதிக்கும்படி கூடி வந்திருக்கிற சபையின் முக்கிய நோக்கம் என்ன?

(A) தேவனை துதிப்பது (B) நம்முடைய சுய விருப்பத்திற்கேற்ப ஆராதிப்பது (C) சபையாருக்கு முன் நம்மை நாமே காண்பிப்பது.

4._____கூட்டத்தில் கிறிஸ்தவர்கள் ஒருவருக்கொருவர் எவ்வாறு போதிக்கலாம்?

(A) பாடுவதின் மூலம் (B) பிரசங்கிப்பதின் மூலம்

(C) A & B லுள்ள இரண்டும்.

5._____கூட்டத்தில் யார் ஜெபத்தினை நடத்துகின்றார்?

(A) புருஷர்கள் (B) குழந்தைகள் (C) ஸ்திரீகள்.

6._____கூட்டத்தினுடைய முக்கிய நோக்கமென்ன?

(A) உடன் கிறிஸ்தவர்களை சந்திப்பது (B) வார்த்தையைப் பிரசங்கிப்பது (C) கர்த்தருடைய பந்தியில் பங்கெடுப்பது.

7._____கிறிஸ்தவர்கள் அன்பிற்கும் நல்ல.....க்கும் ஏவப்படும்படி சந்திக்கின்றனர்.

(A) நினைவுகள் (B) பாடுதல் (C) கிரியைகள்.

ஆம்/இல்லை : உங்கள் பகுதியில் கிறிஸ்துவின் சபை இல்லையென்றால். உங்களுடைய வீட்டில் ஒரு சபையை ஆரம்பிக்க விருப்பமாயிருக்கிறீர்களா?

**வேத ஆராய்ச்சி:-** **ஜெபம் :** மத். 6 : 5-15 ; மாற்.11 : 24; லூக்.11: 1-4; யோவா.14:13; அப்.4: 23-30; எபே. 4: 18; பிலி.4:6; தீமோ.2:8; யாக்.5:16;

**உற்சாகப்படுத்த கூடுதல்:** அப்.11:22-24; 14 :21, 22; 15 : 3, 41; 18 : 23; ரோம. 14 : 19; 15 : 2; 1 கொரி.14: 3-26; எபி.3 : 13; 10 : 24, 25;

## ஜெபியுங்கள்



- ★ கர்த்தருக்கு சித்தமானால் ஜுலை மாதம் திருவள்ளூர் மாவட்டத்தில் நடைபெறவிருக்கும் 11வது வாசகர் கருத்தரங்கிற்காக ...
- ★ குழந்தைகளின் பள்ளித் தேவைகளுக்காக ... மற்றும் சுவிசேஷத்திற்கு கீழ்ப்படிந்து ஞானஸ்நானம் பெற்ற நான்கு சகோதரிகளுக்காக ...
- ★ 12ம் தேதி நடைபெறவிருக்கும் M. பாண்டியராஜ் ✧ G. கனகாவின் பரிசுத்த விவாகத்திற்காக ...

# சந்திப்போம்-சிந்திப்போம்

உரையாடல் – 11 **D. எபிநேசர்**

***தாவீது*** : என்னப்பா ரொம்ப டல்லாயிருக்கே!

***யோனத்தான்*** : இந்த மனுஷங்கள நெனச்சா ரொம்ப சங்கடமா இருக்குப்பா. தேவன் எவ்வளவு உன்னதமா படைச்சு உயர்வான நெலமைல வச்சிருந்திருக்காரு. எல்லாத்தையும் தொலைச்சிட்டு இப்படிக் கெடந்து தவிக்கிறானே ! அதுல நானும் ஒருத்தனா இருக்கிறனேனு நினைக்கிறப்போ மனசு சங்கப்படுது தாவீது.

***தாவீது*** : உன்ன மாதிரியே ஒவ்வொருத்தரும் நெனைக்கணும் யோனத்தான். இந்தக் கட்டுரைய படிக்கிறவங்க எல்லாரும் மத்தவங்களுக்கு இந்தத் துயரக் கதையைச் சொல்லணும். அதைக் கேக்றவங்க எல்லாரும், தங்கள் பாவத்தைக் குறித்து மனஸ்தாபப்படணும்.

***யோனத்தான்***: ஆமாம்ப்பா, மறுபடியும் அந்த ஆசீர்வதிக்கப்பட்ட வாழ்க்கை கெடைக்காதான்னு என்னோட மனசு ரொம்ப ஏங்குதுப்பா.

***தாவீது*** : கவலைப்படாதே. மறுபடியும் அந்த வாழ்க்கை நமக்கு கிடைக்கும் யோனத்தான்.

***யோனத்தான்***: நெஜமாவா சொல்றே!

***தாவீது*** : ஆமா யோனத்தான். அதுக்காகத் தான் தன் ஒரே மகனை இந்த உலகத்துக்கு அனுப்பிச்சாரு. அவர் தான் நம்முடைய ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து. ஒரு மூத்த சகோதரனைப் போல நம்முடைய பாவங்களைச் சுமந்து, நம்ம செஞ்ச தப்புக்காக அவரு தண்டனைய அனுபவிச்சு, நமக்கு ஜீவனைக் கொடுக்கறதுக்காக தன்னோட ஜீவனையே பலியாகக் கொடுத்தாரு. அவருடைய மரணத்தினால தான் இன்னைக்கி நமக்கு ஜீவன் கிடைச்சிருக்கு. இப்ப நாம செய்ய வேண்டியதெல்லாம் நம்ம பாவத்துக்காக மனஸ்தாபப்படணும். உடனே மனந்திரும்பணும். இயேசு கிறிஸ்துவுக்கு முன்னோடியா வந்த யோவான் ஸ்நானகன் (மத். 3 : 2) இயேசுகிறிஸ்து (மத்.4 : 17) சீஷர்கள் (அப். 2: 38) எல்லாரும் இதை வலியுறுத்தி பிரசங்கம் பண்ணிருக்காங்க. தேவன் அப்.17 : 30ல் மனந்திரும்பும்படி எங்குமுள்ள மனுஷருக்கும் கட்டளையிடுவதாக படிக்கிறோம். எனவே ஒவ்வொருவரும் மனந்திரும்பி, பாவமன்னிப்புக்காக ஞானஸ்நானம் எடுக்கணும். அப்போது இரட்சிக்கப்பட்டு, கர்த்தராலே சபையிலே சேர்க்கப்படுவோம். அதன்பிறகு அவருக்கு ஆராதனை செய்து, அவருடைய வார்த்தையின்படி நடந்து, மரண பரியந்தம் உறுதியா இருந்தோம்னா, நிச்சயமா நமக்கும் அந்த சுகமான வாழ்க்கை கிடைக்கும் யோனத்தான்!

***யோனத்தான்***: எனக்கு இப்பவே இரட்சிப்புக்குள்ள வர ஆசையா இருக்கு தாவீது: ஆனா இன்னும் இரண்டு படிகளையும் தெரிஞ்சுக்கிட்டா எனக்கு திருப்தியாயிரும் தாவீது.

***தாவீது*** : அப்படீன்னா அடுத்த தடவ அதப்பத்தி பேசுவோம். இப்ப புறப்படலாமா? *Bye...*

**பொருள்** : தேவன் ஒருவரே இரட்சிப்பவர் எனவே அவரை மட்டும் விசுவாசியுங்கள்.

**ஆக்கியோன்** : ஏசாயா

**காலம்** : ஏறக்குறைய 740 - 681 கி.மு.

**திட்டவரைக் குறிப்பு** :

- ★ ஏசாயா வெளிப்படுத்துகிறது : கர்த்தர் தம்முடைய ஜனங்களின் பாவங்களை அறிகிறார். ஆனால் தொடர்ந்து அவர்களை திரும்பவும் தம்மிடமாகவும் மேசியாவைக் குறித்ததான தம்முடைய வாக்குத்தத்தத்திற்கு அழைக்கிறார்.
- ★ கர்த்தருடைய மேன்மையான திட்டம் சகல தேசத்தாருக்கு அவர்களுடைய அநீதியோடு கூட நியாயதீர்ப்பை உள்ளடக்கியுள்ளது. (13-23)
- ★ தீமையின் மேல் கர்த்தருடைய வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட வெற்றி தம்முடைய ஜனங்களுக்கான மீட்பைக் குறிக்கிறது (24-27)
- ★ கர்த்தருடைய மக்கள் வேறுபட்டவர்களாயிருக்க வேண்டும்(28-39).
- ★ கர்த்தர் தம்முடைய ஜனங்களை தம்மிடம் திரும்பவும் சேர்த்துக் கொள்ளும்படி அழைப்புவிடுத்து ஆறுதல் செய்கிறார் (40-55).
- ★ மனந்திரும்பும் ஜனங்களுக்கு இரட்சிப்பு இலவசமாயிருக்கிறது என்பதையும் தெரிவித்து ஆறுதல் செய்கிறார். (56-66).

***சிறப்புச் செய்தி :***

யாக்கோபின் கோத்திரங்களை எழுப்பவும், இஸ்ரவேலில் காக்கப்பட்டவர்களைத் திருப்பவும், நீர் எனக்குத் தாசனாயிருப்பது அற்ப காரியமாயிருக்கிறது; நீர் பூமியின் கடைசி பரியந்தமும் என்னுடைய இரட்சிப்பாயிருக்கும்படி, உம்மை ஜாதிகளுக்கு ஒளியாகவும் வைப்பேன் என்கிறார்.

***வரலாற்று பின்னணி :***

எருசலேமும், யூதாவும் தங்களைச் சுற்றியுள்ள தேசங்களின் மீது நம்பிக்கை வைக்காமல் தம் இரட்சிப்பிற்காக தேவனை மட்டும் விசுவாசிப்பதன் மூலம் அவர்களைத் திரும்பவும் தேவனுடைய உடன்படிக்கையினிடம் அழைத்தல்.

## பொது அறிவுக்களஞ்சியம்

### அன்னை தெரசா (1910 - 1997)

1979ல் சமாதானத்திற்கான நோபல் பரிசு பெற்றார். 1910ல் (முன்னாள் யூகோஸ்லாவியக் குடியரசான) மாசிடோனியாவில் உள்ள ஸ்கோப்யே என்ற இடத்தில், அல்பேனியப் பெற்றோர்களுக்குப் பிறந்தார். இவரது இயற்பெயர் ஆக்னெஸ்கோன்க்ஸா போஜாக்கின். இவர் தொடங்கிய புதிய பிரார்த்தனைக் கூடத்தின் பெயர் 'தர்மசபை' (Missionaries of Charity). இது 1950ல் ரோமிலுள்ள வாட்டிகன் அரசால் அங்கீகரிக்கப்பட்டது. 1948ல் இவர் இந்தியக் குடிமகன் ஆனார்.

சிறுவர் பகுதி

# ராஜாவினால் கனம் பண்ணப்பட்ட மொர்தெகாய்

வேத பகுதி : எஸ்தர் 6 : 1–12



இந்துதேச முதல் எத்தியோப்பியா தேசமட்டுமுள்ள நூற்றிருபத்தேழு நாடுகளையும் அரசாண்ட அகாஸ்வேரு நாட்களில் மொர்தெகாய் என்ற தேவ மனிதன் ராஜாவின் அரண்மனை வாசலில் உட்கார்ந்திருந்தான். அப்போது வாசல் காக்கிற ராஜாவின் இரண்டு பிரதானிகளாகிய பிக்தானும், தேரேசும் வர்மம் வைத்து, ராஜாவாகிய அகாஸ்வேருவின் மேல் கைபோட வகை தேடினார்கள். இந்தக் காரியம் மொர்தெகாய்க்குத் தெரிய வந்ததினால், அதை ராஜாத்தியாகிய எஸ்தருக்கு அறிவித்தான். எஸ்தர் மொர்தெகாயின் பேரில் அதை ராஜாவுக்கு அறிவித்தாள். ஆகையால் அவர்கள் இருவரும் தூக்கிலிடப்பட்டார்கள். ஆனால் இதை அறிவித்த மொர்தெகாய்க்கோ ஒரு வெகுமதியும் கொடுக்கப்படவில்லை.

ஒருநாள் இரவு ராஜா தூக்கம் வராமல் காலவர்த்தமானங்கள் எழுதியிருக்கிற நடபடி புஸ்தகத்தை கொண்டு வரச் சொல்லி வாசிக்கக் கேட்டார். அதில் ராஜாவாகிய அகாஸ்வேருவின் மேல் கைபோடப் பார்த்த செய்தியை மொர்தெகாய் அறிவித்தான் என்று எழுதியிருந்தது. ராஜா இதற்காக மொர்தெகாய்க்கு கனமும், மேன்மையும் செய்யப்பட்டதா என்று கேட்டார். அதற்கு ஊழியக்காரர் அவனுக்கு ஒன்றும் செய்யப்படவில்லை என்று சொன்னார்கள்.

அப்பொழுது முற்றத்திலே நிற்கிற ஆமானை அழைத்து ராஜா கனம் பண்ண விரும்புகிற மனுஷனுக்கு என்ன செய்யப்பட வேண்டும் என்று கேட்டார். அதற்கு ஆமான் ராஜா உடுத்திக் கொள்ளுகிற ராஜ வஸ்திரமும் மற்றும் ராஜா ஏறுகிற குதிரையும் கொண்டு வரப்பட்டு ராஜா கனம் பண்ண விரும்புகிற மனுஷனை அலங்கரித்தபின் அவனைக் குதிரையின் மேல் ஏற்றி, நகர வீதியில் உலாவும்படி செய்து ராஜா கனம் பண்ண விரும்புகிறவனுக்கு இப்படியே செய்யப்படும் என்று அவனுக்கு முன்பாகக் கூறப்பட வேண்டும் என்றான். உடனே ராஜா ஆமானை நோக்கி நீ சொன்னபடி யூதனாகிய மொர்தெகாய்க்கு செய் என்றார். அந்தப்படியே செய்யப்பட்டு மொர்தெகாய் ராஜாவின் அரண்மனைக்குத் திரும்பினான். ஆமானோ வென்றால் சஞ்சலப்பட்டு முக்காடிட்டுக் கொண்டு தன் வீட்டுக்குத் தீ விரித்துப் போனான்.

ஏற்ற சமயத்தில் சொன்ன வார்த்தை வெள்ளித் தட்டில் வைக்கப்பட்ட பொற்பழங்களுக்குச் சமானம் என்ற வசனத்தின்படி மொர்தெகாய் ஏற்ற சமயத்தில் சொன்ன வார்த்தைக்கு பலன் கிடைத்தது. அது போல நீங்களும் தேவனால் கனம் பண்ணப்பட உள்ளதை உள்ளதென்றும் இல்லதை இல்லதென்றும் சொல்லுங்கள் அப்போது தேவனால் கனம் பண்ணப்படுவீர்கள்.

**மனப்பாட வசனம்**

"உண்மையுள்ள மனுஷன் பரிபூரண ஆசீர்வாதங்களைப் பெறுவான்" (நீதி. 28 : 20)

# வேத அறிவுப் போட்டி எண். 34

***போட்டியாளர்கள் கவனத்திற்கு,***

கீழ்க்கண்ட பத்து கேள்விகளுக்கும் விடைகளை உங்கள் சுயமுயற்சியினால் வேதாகமத்திலிருந்து கண்டுபிடித்து வசன ஆதாரத்துடன் 50 பைசா தபால் கார்டில் இம்மாதம் இறுதிக்குள் எமக்கு வந்து சேரும்படி எழுதி அனுப்பி வைக்க வேண்டும். 20 வயதிற்கு மேற்பட்டவர்கள் இப்போட்டியில் கலந்து கொள்ளலாம்.

Ref.No., உங்கள் பெயர், ஊர் மற்றும் தெளிவான முகவரியுடன் எழுதி அனுப்பவும்.

1. விக்கிரகங்களை உருவாக்குகிற யாவரும் எப்படிப்பட்டவர்?
2. பன்னிரண்டு வருஷகாலமாய், நானும் என் சகோதரரும் அதிபதிகள் வாங்குகிற படியை வாங்கிச் சாப்பிடவில்லை என்பவன் யார்?
3. நியாயப்பிரமாணமில்லாமல் எந்நீதி வெளியாக்கப்பட்டிருக்கிறது?
4. முன்னே நான் தூஷிக்கிறவனும், துன்பப்படுத்துகிறவனும், கொடுமை செய்கிறவனுமாயிருந்தேன், அப்படியிருந்தும், நான் அறியாமல் அவிசுவாசத்தினாலே அப்படிச் செய்தபடியினால் இரக்கம் பெற்றேன் என்றவன் யார்?
5. வீட்டை உண்டு பண்ணினவன் எதைப் பார்க்கிலும் அதிக கனத்திற்குரியவனாயிருக்கிறான்?
6. அகாவா நீதியண்டையிலே உபவாசத்தைக் கூறினவன் யார்?
7. பூமியிலே உங்கள் வம்சம் ஒழியாமலிருக்க உங்களை ஆதரிக்கிறதற்காகவும், பெரிய இரட்சிப்பினால் உங்களை உயிரோடே காப்பதற்காகவும் தேவன் என்னை உங்களுக்கு முன்னமே அனுப்பினார் என்றவன் யார்?
8. இரட்சிக்கமாட்டாத தேவனைத் தொழுது கொள்ளுகிறவர்கள் எப்படிப்பட்டவர்கள்?
9. சகோதரனுக்கு விரோதமாய்ப் பேசி, தன் சகோதரனைக் குற்றப்படுத்துகிறவன் நியாயப் பிரமாணத்திற்கு விரோதமாய்ப் பேசி எதைக் குற்றப்படுத்துகிறான்?
10. மாம்சத்தில் வந்த இயேசு கிறிஸ்துவை அறிக்கை பண்ணுகிற எந்த ஆவியும் யாரால் உண்டாயிருக்கிறது?

# நடப்புச் செய்திகள்

★ இந்தியா- பாக்கிஸ்தான் விவகாரம் : வாஜ்பாய் அமைதி முயற்சிக்கு புஷ் பாராட்டு.

★ நாட்டின் 16 மாநிலங்களுக்குப் பயன்படும் வகையில், கூடுதலாக 50 ஆயிரம் மெகாவாட் நீர்மின் திட்டம் செயல்படுத்தப்படும் என்று பிரதமர் வாஜ்பாய் கூறினார்.

★ சார்ஸ் நோயின் பாதிப்பு கடுமையாக இருப்பதால் சுற்றுலா, போக்குவரத்து மற்றும் சேவைத் துறைகளில் தாற்காலிகமாக வரிகளை ரத்து செய்வது அல்லது குறைப்பது என்று சீன அரசு முடிவு செய்துள்ளது.

★ மயிலாடுதுறை அருகே உள்ள வழுவூரில் பூமிக்கடியில் புதைந்திருந்த சுமார் 2 ஆயிரம் ஆண்டுகள் பழமை வாய்ந்த முதுமக்கள் தாழி கண்டெடுக்கப்பட்டது.


★ உலக ரயில்வே வாலிபால் சாம்பியன்ஷிப் போட்டிகளில் இந்திய ரயில்வே அணி முதல்முறையாக தங்கம் வென்றது.

Owned and published by B. Arjunan from 17.2.102D/5, Rajan Nagar, Batlagundu - 624 202. and Printed by V.D. Thankachan at Novelty Press, 3. Dhanappa Mudali Street, Madurai-625 001. **Editor : B. Arjunan.**

Registered with Registrar of Newspapers for India under No. TNTAM/2000/3629
Postal Registration No. TN/SR-164/2003-2005. Licensed to post without prepayment
License No. TN/WPP-25/SR/2003-2005. Posted at Batlagundu Post Office on 10th June 2003.

எங்களோடு சேர்ந்து தேவனை ஆராதிக்க அன்புடன் அழைக்கிறோம்.



# HEAR THE VOICE OF TRUTH

## ON RADIO SRILANKA ALL INDIA SERVICE

| LANGUAGE | DAY'S | TIME | ADDRESS | SPEAKER |
|---|---|---|---|---|
| HINDI | Sunday Thursday | 6.45 a.m 7.00 a.m | Box. 3815 New Delhi - 110 049 | SUNNY DAVID |
| TELUGU | Sun,Mon Wed,Thu | 2.00 p.m 2.15 p.m | Box. 80 Kakinada - 533 001 | JOSHUA GOOTAM |
| TAMIL | Mon, Tue, Wed, Thu, Fri | 5.30 p.m 5.45 p.m | Box. 8405 Bangalore - 560 084 | P.R. SWAMY |
| MALAYALAM | Friday | 3.45 p.m 4.00 p.m | Box. 5540 Trivandrum - 695 034 | P.K. VARGHESE |

Please write to these addresses for Bible Correspondence Course, Magazines and other Christian Literature in Language

ALL OF THESE PROGRAMMES ARE SPONSORED BY THE CHURCH OF CHRIST

**Monthly Magazine** **FOR FREE DISTRIBUTION ONLY**

To

From

**Editor**
**THE WORD OF CHRIST**
Post Box No.5,
Batlagundu-624 202.